**தேசிய அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிறுவனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,
- நிறுவனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- நிறுவனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமத்துடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நிய இலக்கம் 20 இன் 117 (ஈ) பந்தியின் பிரகாரம், கட்புலச் சொத்தொன்று ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்படாது நிதி நிலைமைக் கூற்றில் தனியானதொரு உருப்படியாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 1,325,836 கிரயமான கணினி மென்பொருள் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நிய இலக்கம் 20 இன் பிரகாரம் கட்புலச் சொத்தொன்றாக தனியாக கணக்குகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கதாக தெரிவித்துக்கொள்கின்றேன். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கட்புலச் சொத்துக்கள் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 2,210,815 கிரயமான 06 வெவ்வேறு இருப்பு உருப்படிகளின் பெறுமதி மற்றும் 03 பிரிவுகளுக்கு உரிய ரூபா 884,883 கிரயமான இருப்பு உருப்படிகள் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 3,095,698 இனால் அதிகரித்தும், நடைமுறைச் சொத்துக்கள் அந்த அளவினால் குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட்ட இருப்பு உருப்படிகள் மீளாய்வாண்டின் போது கணக்கு வைக்கப்பட்டிராமையால், அவற்றை இனங்கண்டு கணக்கு வைத்துள்ளதாக குறிப்பிடுகின்றேன். | கணக்கு காலப்பகுதிக்குரிய நடைமுறைச் சொத்துக்கள் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடந்த வருடங்களின் பிரகாரம் எதிர்வரும் வருடங்களுக்குரிய ரூபா 2,733,795 கூட்டுத்தொகையான செலவினங்கள் மீளாய்வாண்டின் செயற்பாட்டு வருமானத்திற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 3,894,996 இனால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டது. | நிறுவனத்தினால் இதுவரையிலும் பேணப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளில் பிரகாரம் நிறுவனத்தின் கணக்கு வைத்தல் சரியானது என்பதுடன், உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு உரிய சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். | கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களில் சரியாக காண்பிக்கப்படும் வகையில் காலப்பகுதிக்குரிய சரியான பெறுமதி கணக்கு வைக்கப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (I) | நிதிப் பிரமாணம் 371 (2)(அ) | பணியை திட்டவட்டமாக இனங்காணாது செயற்பட்ட காரணத்தால் 2021 ஆம் ஆண்டின் போது 12 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 194,720 கூட்டுப் பெறுமதியுடைய முற்பணங்கள், செலவினம் மேற்கொள்ளப்படாது / 50 சதவீதத்தினை விட குறைவான செலவினம் மேற்கொண்டமையால் காசாக மீள தீர்க்கப்பட்டிருந்தது. குறித்த தொகைகளை அலுவலகங்களுக்கு மீள செலுத்தும் போதும் கருத்திற்கொள்ளக்கூடிய அளவிலான தாமதத்துடன் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கடந்த காலங்களில் ஏற்பட்ட நடைமுறை நிலைமைகளின் அடிப்படையில் பல்வேறு ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்களை முழுமையாக செலவினம் மேற்கொள்ள முடியாதிருந்தது. எவ்வாறான போதிலும் இந்த நிலைமையை குறைத்துக்கொள்ள உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (II) | நிதிப் பிரமாணம் 880(1) மற்றும் நிதிப்பிரமாணம் 881 | பிணைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பிணை பெற்றுக்கொள்ள வேண்டிய எந்த உத்தியோகத்தரிடமிருந்தும் பிணை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த சுற்றறிக்கை தொடர்பில் ஆராய்ந்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2008 பெப்ரவரி மாதம் 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | அனைத்து அரச நிறுவனங்களினாலும் குடியுரிமை சேவைபெறுநர் விஞ்ஞாபனம் அறிமுகப்படுத்தப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வுத் திகதியான 2022 சனவரி 28 ஆந் திகதி வரையிலும் நிறுவனத்தினால் குடியுரிமை சேவைபெறுநர் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளவாறு நிறுவனத்தினால் வழங்கப்படும் சேவைகள் சேவை பெறுநருக்கு எவ்வாறு வழங்குவது என்பது தொடர்பில் புலப்படுத்தும் வகையிலான குடியுரிமை சேவைபெறுநர் விஞ்ஞாபனம் தயாரிக்குமாறு தெரிவித்துக்கொள்கின்றேன். | பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (இ) | பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க சுற்றறிக்கையில் பொது முயற்சிகளின் நல்லாளுகை தொடர்பில் வெளியிடப்பட்ட வழிகாட்டிக் கையேட்டின் 4.2.6 ஆம் பந்தி | தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட கணக்காய்வு அறிக்கைகள் பணிப்பாளர் சபை கூடி அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை மீளாய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், 2019 சனவரி முதல் 2021 திசெம்பர் மாதம் வரையிலும் நடாத்தப்பட்ட 14 பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் அந்த கணக்காய்வு ஐயவினாக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் ஆராயப்பட்டு தீர்விகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்கள் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படுவதுடன், சபையினால் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியமை. | கணக்காய்வு அவதானிப்புகள் தொடர்பில் பணிப்பாளர் சபையினால் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் மற்றும் அந்த விடயங்கள் தொடர்பிலான நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றத்தினை உறுதிப்படுத்தும் பதிவுகளை எழுத்துமூலம் பேண நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2015 யூலை 14 ஆந் திகதிய சுற்றறிக்கை இலக்கம் 03/2015 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை | செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்படுவது பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கே ஆன போதிலும், இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை தரத்திற்குரிய 08 | பதவிநிலை உத்தியோகத்தர்களின் கண்காணிப்பின் கீழ் பணிப்பாளரின் அங்கீகாரத்துடன் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் முற்பணங்கள் வழங்கப்படுகின்றன. | அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டில் செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

| மூலம் | 2020 | 2021 | வேறுபாடு | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| ஏனைய செயற்திட்டங்களிலிருந்தான மாற்றல்கள் | 64,663,687 | 44,696,747 | (19,966,940) | (31) |
| நுகர்வுப் பண்டங்கள் மற்றும் வழங்கல்கள் | 9,676,817 | 14,425,984 | 4,749,167 | 49 |
| செயற்திட்டச் செலவினம் | 64,663,687 | 45,366,230 | (19,297,457) | (30) |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,251,969 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 4,719,340 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,467,371 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு திறைசேரியின் மீண்டெழும் பெறுவனவுகள் ரூபா 10,488,378 இனால் அதிகரித்தமையும், ஏனைய செலவினங்கள் ரூபா 1,888,951 இனால் மற்றும் செயற்திட்ட செலவினம் ரூபா 19,297,457 இனால் குறைவடைந்தமையும் பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு பின்வருமாறு ஆகும்.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

முன்னைய ஆண்டின் நடைமுறைச் சொத்து விகிதம் 1:1.4 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் போது அது 1:1.7 ஆக அதிகரித்திருந்தது. விரைவுச் சொத்து விகிதம் 1:1.26 இலிருந்து 1:1.01 வரை குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் அதன் பெறுபேறுகளை சமூகமயப்படுத்தல் நிறுவனத்தின் பிரதான பணிப்பொறுப்பாவதுடன், 2015 முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்பட்டுள்ள 16 ஆராய்ச்சிகளின் இறுதி | 16 ஆராச்சிகளின் இறுதி அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட சஞ்சிகையொன்றில் அல்லது மாநாடொன்றில் முன்வைப்பதற்கும், 05 ஆராய்ச்சிகளின் இறுதி அறிக்கைகளை | ஆராச்சிகளின் இறுதி அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட சஞ்சிகையொன்றில் அல்லது மாநாடொன்றில் முன்வைப்பதற்கும், ஆராய்ச்சிகள் நிறைவு |

| | | |
|---|---|---|
| அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட சஞ்சிகையொன்றில் அல்லது மாநாடொன்றில் முன்வைக்கப்பட்டிராமை, ஆராய்ச்சிக் காலம் நிறைவடைந்துள்ள 05 ஆராய்ச்சிகளின் இறுதி அறிக்கைகள் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் , 2015 ஆம் ஆண்டின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டு தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ள 04 ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்கு உரிய பெறுபேறுகளை சமூகமயப்படுத்த போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை ஆகிய விடயங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | சமர்ப்பிப்பதற்கும், 04 ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளை சமூகமயப்படுத்தவும் எதிர்பார்த்துள்ளதாக தெரிவித்துக்கொள்கின்றேன். | செய்யப்பட்ட பின்னர் கால அடிப்படையில் இறுதி அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கும் ஆராய்ச்சி செயற்திட்டங்களில் பெறுபேறுகளை சமூகமயப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) தேசிய அறுவடைக்கு பின்னரான முகாமைத்துவ நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து ஆராய்ச்சி நடைமுறையின் பின்னரும் புதிய உற்பத்திகளை மேற்கொண்டு சமூகமயப்படுத்தல் பிரதான நோக்கமாகும். எனினும், மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையில் 2000 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலுமான 21 வருட காலப்பகுதியினுள் இயந்திர வேலைத் தளத்தில் நடாத்தப்படும் உற்பத்தி இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் பதிவேடுகளின் பிரகாரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 19 புதிய பிறப்பாக்கி இயந்திரங்கள் 02 வகையானவை மாத்திரம் சமூகமயப்படுத்தப்பட்டிருந்தது. | இந்த பெரும்பாலான இயந்திரங்கள் ஆராய்ச்சிகள் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டு 10 வருடங்களை விட அதிக காலம் கடந்துள்ளமையால் இயந்திரங்களை சமூகமயப்படுத்துவதில் சிரமமொன்று காணப்படுகின்றது. | சமூகத்தின் தேவைப்பாட்டினை கருத்திற்கொண்டு இயந்திரங்களை உற்பத்தி செய்யவும், அவற்றை செயற்திறனாக சமூகமயப்படுத்தி நிறுவனத்தின் செயலாற்றலை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியினுள் நடைமுறைப்படுத்தப்பட்ட பழங்களை கனிய வைக்கும் சேதன முறையை | அதனுடன் தொடர்புடைய 03 ஆராய்ச்சி கூற்றுக்கள் வெளியிடப்பட்டுள்ளன. எனினும், ஆராய்ச்சியின் பிரதான ஆராய்ச்சியாளர் | செயற்திட்டங்களை திட்டமிடும் போது மற்றும் நடைமுறைப்படுத்தும் போது |

| | | |
|---|---|---|
| அறிமுகப்படுத்தும் ஆராய்ச்சியின் (Induction of Fruit Ripening By Organic Method) கண்டறிவதற்கு காப்புரிமையை பெற்றுக்கொள்ளல் மற்றும் ஆராச்சியின் பெறுபேற்றினை வணிக மட்டத்தில் பிரபல்யப்படுத்தல் ஆகியவற்றுக்கு ரூபா.9,572,715 செலவிடப்பட்டிருந்த போதிலும், 2022 சனவரி 28 ஆந் திகதி வரையிலும் இந்த செயற்திட்டம் செயற்பாட்டு மட்டத்தில் காணப்படவில்லை. | சேவையிலிருந்து நீங்கியமையால் காலப்பகுதியினுள் ஆராய்ச்சிகளை நிறைவு செய்ய முடியாதிருந்தது. இந்த உபகரணங்கள் தற்போது வரையிலும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது. வணிக ரீதியான இயலுமை குறைவாக காணப்படுகின்றமையால் காப்புரிமை பெற்றுக்கொள்ளப்படவில்லை. | எதிர்பார்த்த நோக்கங்களை ஆக்கபூர்வமாக அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், ஆராய்ச்சியாளர் ஆராய்ச்சியை இடைநடுவில் நிறுத்தியமையால் விளைவற்றதாகும் ஆராய்ச்சி செலவினங்களை பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து மிகை அறவீடு செய்ய உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று தாபிக்கப்பட வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2015 ஆம் ஆண்டின் போது ஆய்வுகூட ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக ரூபா 15,216,575 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் வருடாந்தம் ரூபா 275,000 பராமரிப்பு செலவினம் ஒன்றை செய்து முழுமையான வளிப்பதனாக்கி நிலைமையை பேணிச் செல்கின்ற Gas Chromatograph Mass Spectrometer (GCMS) இயந்திரம் 2022 ஏப்ரல் மாத இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த இயந்திரத்தினை உரிய முறையில் பயன்படுத்த அதிக கிரயம் மேற்கொள்ள நேர்கின்றமையால் பயனுள்ள அரச நிறுவனமொன்றிற்கு வழங்குதல் தொடர்பில் உயர் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 2015 ஆம் ஆண்டு முதல் இயந்திரம் பல்வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், அதனை நிறுவனத்தின் ஆராய்ச்சிகளுக்கு பயன்படுத்த உரிய நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன. | இயந்திரத்தினை தொடர்ச்சியாக பயன்படுத்துவதற்கு அல்லது பயனுள்ள அரச நிறுவனமொன்றிற்கு சாட்டுவதற்கு முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | விவசாய அமைச்சின் நிதியேற்பாட்டினை பயன்படுத்தி தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படும் 07 வகையான உணவு வகைகள், 04 பாரவுலோகங்கள் உள்ளடங்கியுள்ளதா என்பதை பரீட்சித்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 1,956,120 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டு 500 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டிருந்தன. அதற்குரிய செயற்திட்ட அறிக்கைகளின் பிரகாரம் சில பொருட்களின் உச்ச பாதுகாப்பு மட்டத்தினை விஞ்சி Cadmium, Arsenic and Leaf போன்ற பாரவுலோக்கங்கள் உள்ளடங்கியுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறான போதிலும், அந்த அறிக்கையின் முடிவுரைகள் மற்றும் முன்மொழிவுகளின் பிரகாரம் பாரவுலோக்கங்கள் உள்ளடங்கியுள்ள உணவுப் பொருட்கள் தொடர்பில் மேலதிக விசாரணையொன்று நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு, அது தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய அனைத்து தரப்பினருக்கும் உரிய நடவடிக்கை எடுக்க தகவல் வழங்கப்பட்டிராத காரணத்தல் ஆராய்சி செலவினம் விளைவற்றதாகியிருந்தது. | பார உலோக பகுப்பாய்வு செயற்திட்டத்தின் அனைத்து அறிக்கைகளும் விவசாய அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளது. விவசாய அமைச்சின் அங்கீகாரமின்றி வேறு தரப்பினருக்கு அறிக்கை வழங்கும் அனுமதி இல்லை. | அறிக்கையின் முடிவுரைகள் மற்றும் முன்மொழிவுகளின் பிரகாரம் பாரவுலோகம் உள்ளடங்கியுள்ள உணவுப் பொருட்கள் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டு ள்ளமையால், பொறுப்புக்கூற வேண்டிய அனைத்து தரப்பினர் மற்றும் நிறுவனங்களுக்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்காக அனுப்பப்பட வேண்டும். |
| (இ) | 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டிருந்த இலங்கை விவசாய பயிர்களின் வழங்கல் மற்றும் பெறுமதியிடல் முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக 2018 ஏப்ரல் 05 ஆந் திகதி ரூபா 1,290,000 செலவிடப்பட்டு GPS Trackers Unit 100 மற்றும் 2018 | 2018 ஆம் ஆண்டின் போது பழங்கள் மற்றும் மரக்கறிகளின் வழங்கலினுள் வெப்பம் மாற்றமடையும் விதத்தினை ஆராய்ச்சி செய்து Temperature Loggers கொள்வனவு செய்யப்பட்டதுடன், 2019 ஆம் ஆண்டின் போது அதனை நடைமுறைப்படுத்துவதற்கு போதிய நிதியேற்பாடு கிடைக்காமையால் | உத்தேச நோக்கங்கள் நிறைவேறும் வகையில் செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மார்ச் 22 ஆந் திகதி ரூபா 4,680,000 செலவிடப்பட்டு Tempered Data Lorggers 130 கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2022 சனவரி 28 ஆந் திகதி வரையிலும், அவற்றுள் GPS Trackers Unit 72 மற்றும் Tempered Data Lorggers 09 பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் காணப்பட்டது. உரிய உபகரணங்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்படாமை காரணமாக அந்த செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 7,292,332 ஆன தொகை விளைவற்ற செலவினமாகியிருந்தது. | எதிர்பார்த்தவாறு அனைத்து உபகரணங்களையும் பயன்படுத்த முடியாதிருந்தது. மேலும், அவை அனைத்தையும் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. | |

**3.4 பெறுகைகள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் பாரிய (Large) வகையிலான 22350 எண்ணிக்கையான பிளாஸ்டிக் கூடைகள் மற்றும் அதி விசாலமான (Jumbo) ரகத்திலான 10,990 கூடைகள் ரூபா 53,357,400 தொகைக்கு 02 விநியோக நிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், இந்த கொள்வனவுகள் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்பட்டு பொருத்தமான விலைக்கேள்வியாளர் பெறுகைகள் குழுவிற்கு பரிந்துரை செய்யப்பட்டிராமையால் கூறுவிலைகளை சமர்ப்பித்த 02 நிறுவனங்களும் சரிக்கு சமனாக கொள்வனவு மேற்கொண்டமையால் சந்தை போட்டித்தன்மையின் ஊடாக சாதகமான விலையொன்று நிறுவனத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த இரு வழங்குநர்களும் கூறுவிலைகளை சமர்ப்பிக்கும் போது அமைப்புக் குறிப்பீடுகளுக்குரிய சில குறைபாடுகள் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் அவதானிக்கப்பட்டது. நிறுவனங்களுக்கு பொருட்கள் கிடைத்த பின்னர் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவிடமிருந்து கிடைத்துள்ள பொருட்கள் அமைப்புக் குறிப்பீடுகளுடன் அவதானிக்கப்பட்டு முன்னை வருடங்களை போன்றே சான்றுபடுத்தப்படும். இந்த அமைப்புக்குறிப்பீடுகளை சான்றுபடுத்த இவற்றை மீண்டும் பகுப்பாய்வு செய்யக்கூடிய ஆய்வுகூடமொன்றுக்கு அனுப்ப வேண்டும். | பெறுகையில் சந்தை போட்டித்தன்மையின் ஊடாக சாதகமான விலையொன்று நிறுவனத்திற்கு பெற்றுக்கொள்ளும் வகையில் பெறுகை நடைமுறையை பின்பற்றவும், நிறுவனம் எதிர்பார்க்கும் தொழில்நுட்ப அமைப்புக்குறிப்பீடுகளை சரியாக மதிப்பீடு செய்யவும் பொருட்கள் கிடைத்த பின்னர் அந்த அமைப்புக் குறிப்பீடுகளை சான்றுபடுத்திய பின்னர் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |